நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலகம், சென்னை 600 005

ந.க.எண் 481/2012/எப்3 நாள் 16 –2–2012

## சுற்றறிக்கை

பொருள் பணியமைப்பு – மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடஙகளை பூர்த்தி செய்தல் – அறிவுரை வழஙகப்படுகின்றது.

ஒஒஒஒஒ

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பொது சுகாதாரப் பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் பிற பிரிவுகளில் ஓட்டுநர் பணியிடஙகள் காலியாக உள்ளதெனவும், இதனால் அன்றாட இன்றியமையாப் பணிகள் பாதிக்கப்பட்டு வாகனஙகளை இயக்க ஓட்டுநர்கள் இல்லாது பொது மக்களுக்கு வழஙகும் சேவை பாதிப்பு ஏற்படுகின்றது என்பது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின்கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அந்தந்த மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தற்போதுள்ள அனுமதிக்கப்பட்ட ஓட்டுநர் காலியிடஙகளை இனம் கண்டு, பொது சுகாதாரம் மற்றும் பிற அடிப்படைப் பணி விதிகளில் கல்வித் தகுதியும் கனரக வாகன ஓட்டுநர் உரிமமும் பெற்றுள்ள தகுதியுள்ள துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இப்பொருள் தொடர்பாக கீழ்கண்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி அனுமதிக்கப்பட்ட பணியிடஙகளை நிரப்புமாறு அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுரை வழஙகப்படுகின்றது.

1) ஏற்கனவே கனரக வாகன ஓட்டுநர் உரிமமும் மற்றும் உரிய கல்வித் தகுதி (மாநகராட்சிகளில் 10ஆம் வகுப்பு தேர்ச்சியும், நகராட்சிகளில் 8ஆம் வகுப்பு தேர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும்) உள்ள துப்புரவுப் பணியாளர்களையும் அடிப்படைப் பணியாளர்களையும் கொண்டு முதுநிலைப்பட்டியல் தயாரித்து, முதுநிலைப்படி தற்போது காலியாக உள்ள வாகன ஓட்டுநர் பணியிடத்தினை பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
2) ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்ட ஆவணஙகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒருஙகிணைந்த பணி மூப்புப் பட்டியலில் உள்ள நபர்களை, முதுநிலை அடிப்படையின் மூலமே பதவி உயர்வு செய்யப்பட வேண்டும்
3) மாநகராட்சி மற்றும் நகராட்சி நியமனக்குழுவில் முதுநிலைப்படி பட்டியல் வைக்கப்பட்டு நியமனக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, முதுநிலைப்படி வாகன

ஓட்டுநர்கள் பதவி உயர்வு மூலம் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்களிலிருந்து நியமனம் செய்யப்பட வேண்டும்.

4) நியமனக்குழுவிற்குப் பொருள் வைக்கும்போது முதுநிலையில் உள்ள அனைவரின் பட்டியலும் வைக்கப்பட்டு, வரிசைக் கிரமமமாக ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

5) அனுமதிக்கப்பட்ட பணியிடம் போதிய அளவு இல்லாத நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் பின்னர் பணியிடம் தோற்றவிக்கப்படும்போது மேற்கண்ட பணியாளர்களை முதுநிலைப்படி எதிர்வருங்காலங்களில் ஓட்டுநராகப் பணி நியமனம் செய்யப்படுவார்கள் என நியமனக் குழுவில் தீர்மானம் பெறப்பட வேண்டும்.

6) பணி விதிகளின்படி யாருக்கேனும் பதவி உயர்வு வழங்க வேண்டியிருப்பின் அவர்களுக்கு விதிகளின்படி முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

மேற்கண்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி **24.2.2012க்குள் நியமனக் குழுவின் ஒப்புதல் பெற்று** எவ்விதப் புகாருக்கும் சற்றும் இடம் தராமல் தோற்றுவிக்கப்பட்டு தற்போது அனுமதிக்கப்பட்ட காலிப் பணியிடங்களில் (Sanctioned posts – vacant posts) ஓட்டுநர் பணியிடம் நிரப்பி அதற்கான பணி ஆணை நகலுடன், மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சி ஆணையர்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு **29.2.2012 க்குள் தவறாது தனி நபர் மூலமாக** அறிக்கை அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஒம்/– சந்திரகாந்த் பி.காம்ப்ளே,
நகராட்சி நிர்வாக ஆணையாளர்

பெறுநர்

அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்

அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்

நகல் கூடுதல் இயக்குநர்
தலைமைப் பொறியாளர்
இணை இயக்குநர் (நிர்வாகம்)
கண்காணிப்பாளர்
ஜே / எம்சிஏ பிரிவு

ஆணைப்படி அனுப்பப்படுகிறது

கண்காணிப்பாளர்